ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு மறுபடியும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் இப்பொழுது ஒன்றும் ஒன்றும் இரண்டு, இரண்டும் ஒன்றும் மூன்று (சிரிப்பு) இப்படி மூன்றாவது வகுப்புவரை ஒரே ஆசிரியர் சொல்லிக் கொண்டிருந்தால் அந்தக் குழந்தைகள் எப்படிப் படிக்கும். தனியார் பள்ளிக் கூடத்திற்குத் தான் போகும். ஆகவே, இதையெல்லாம் அறிந்து தேர்வாணைக் குழு மூலமாக ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதை விட்டுவிட்டு, எம்பளாய்மெண்ட் மூலமாக மாண்புமிகு கல்வி அமைச்சரும், மாண்புமிகு முதல் அமைச்சரும், நேரிடையாக தெரிவுசெய்ய ஆவன செய்யப் படுமா ? அரசாங்கத்தில் நிதிப் பற்றாக்குறை இருந்தால், அரசு பள்ளிகளை தனியாரிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தாமரைக்கனி பல அரிய கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். (சிரிப்பு) அவைகளையெல்லாம் பரிசீலிக்கலாம். ஆனால் ஆசிரியர் நியமனத்தைப் பொறுத்தமட்டில் தேர்வாணைக் குழு என்பது, அதற்கென சிறப்பானத் தகுதி படைத்தவர்களை நியமித்து, ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியின் கீழே அந்தக் குழுவை அமைத்திருக்கிறோம். விருப்பு வெறுப்பு இல்லாமல், சிறந்த முறையிலே அவர்கள் தேர்ந்தெடுத்து, நல்ல ஆசிரியர்களை நம்முடைய பள்ளிகளுக்கு தரவேண்டும். ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது வேறு எந்தப் பிரச்சினைகளும் அதிலே வரக் கூடாது என்பதிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கவனமாக இருக்கிறார்கள்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் புகளூர் சர்க்கரை ஆலையில் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு திரு.ம. சின்னசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘ திருச்சிராப்பள்ளி மாவட்டம் புகளூர் சர்க்கரை ஆலையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து ’’ மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

திருச்சி மாவட்டம் புகளூரிலுள்ள டெக்கான் சுகர்ஸ் நிறுவனம் 2,500 டன் அரைவைத் திறன் கொண்டது. இந்தத் தொழிற்சாலை சுமார் 650 தொழிலாளர்களுக்கு வேலை அளித்து வந்தது. இந் நிறுவனத்தில் ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., ஐ.என்.டி.யு.சி., ஏ.டி.பி., எல்.பி.எப். போன்ற மைய அமைப்புகளைச் சேர்ந்த தொழிற் சங்கங்களும், புகளூர் சர்க்கரை ஆலை பொதுத் தொழிலாளர் சங்கம் மற்றும் டி.எஸ்.ஏ. கம்பெனி ஸ்டாஃப் மற்றும் ஓர்க்கர்ஸ் யூனியன் என்னும் தொழிற் சங்கங்கள் இயங்கி வந்தன.

நவபாரத் நிறுவனம் இந்தத் தொழிற்சாலையை ஈ.ஐ.டி. பாரி நிர்வாகத்தினருக்கு 13-11-1992 தேதிய ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்துவிட்டதாகத் தெரிவித்தது.

ஒரு நிறுவனத்தை இவ்வாறு விற்பதனால் நிறுவனத் தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்வதுபோல் முன் அறிவிப்பு வழங்கி இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும். இதன் பொருட்டு தொழிலாளர்களுக்குத் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25-எப். எப்.-ன் கீழ் முன்னறிவிப்பு வழங்க வேண்டும். அதேபோல் நவபாரத் நிர்வாகம் தொழிற்சாலையில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1947-ம் வருட தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25-எப். எப்.-ன்படி அவர்களுக்குச் சட்டப்படி சேரவேண்டிய ஈட்டுத் தொகையை வழங்கிவிட்டதாகவும் தெரிவித்துள்ளது.

நவபாரத் நிறுவனத்திற்கும் ஈ.ஐ.டி. பாரி நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்ட விற்பனை ஒப்பந்தத்தில், சர்க்கரை ஆலை அமைந்துள்ள நிலம், கட்டிடம், மற்றும் இயந்திரங்கள் ஆகியவைகளை மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது. அத்தொழிற்சாலையில் பணியாற்றி வந்த தொழிலாளர்களை எடுத்துக்கொள்ள இவ்வொப்பந்தத்தில் வகை செய்யப்படவில்லை. மற்றும் உரிமை மாற்றம் செய்யப்பட்ட நாள் வரை நிறுவனத்திலுள்ள தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் அவர்கள் சம்பந்தமாக நிலுவையிலுள்ள வழக்குகள் அனைத்திற்கும் பழைய நிர்வாகமான நவபாரத் நிறுவனமே பொறுப்பு என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறுவன மாற்றத்திற்குப் பின் பழைய தொழிலாளர்களுக்குப் புதிய நிர்வாகம் வேலை அளிக்க வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகள் சம்பந்தமாக தொழிற் சங்கங்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் தொழிலாளர் ஆணையர் முன்பு 16-12-1992,

8–1–1993, 9–2–1993 மற்றும் 18–2–1993 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் நவபாரத் நிறுவனம், ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் மற்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பேச்சுவார்த்தைகளின்போது நவபாரத் நிறுவனம் பழைய தொழிலாளர்களுக்குச் சட்டப்படி சேரவேண்டிய அனைத்துத் தொகைகளையும் தாங்கள் பட்டுவாடா செய்து விட்டதாகவும், நிறுவனத்தை ஈ.ஐ.டி. பாரிக்கு விற்றுவிட்டதால் இத்தொழிலாளர்களுக்கு மீண்டும் தாங்கள் வேலையளிப்பது என்ற பிரச்சினையே எழவில்லை என்றும் தெரிவித்துள்ளது. அதே சமயத்தில் நிறுவனத்தை விற்ற தேதிவரைக்கான தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய போனஸ் தொகையைச் சட்டப்படி வழங்கத் தாங்கள் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தது. ஈ.ஐ.டி. பாரி நிர்வாகத்தின் சார்பில், தற்போது தொழிற் சங்கங்கள் எழுப்பியுள்ள கோரிக்கைகளுக்கும் தங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும் நவபாரத் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி, சொத்துக்களை மட்டும் தான் தாங்கள் வாங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஈ.ஐ.டி. பாரி நிர்வாகத்தினர் தாங்கள் நிறுனத்தை விலைக்கு வாங்கிய பிறகு தங்களது தேவைக்கேற்ப சுமார் 200 பழைய தொழிலாளர்களையும் சுமார் 25 புதிய தொழிலாளர்களையும் பணிக்கு அமர்த்தியுள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

தொழிற் சங்கங்கள் அனைத்தும் பழைய தொழிலாளர்களுக்கும் வேலையளிக்க வேண்டும் என்று கோரியதுடன் புதிய நிர்வாகம் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவதையும் ஆட்சேபித்தனர். மேலும் இது குறித்து 1–3–1993 முதல் தொழிலாளர்கள் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், 17–3–1993 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

நிர்வாக மாற்றத்தால் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினை குறித்து தொழிலாளர் ஆணையர் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டுள்ளார். தொழிற் சங்கங்கள் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும், பேச்சுவார்த்தைகளின் முடிவினை எதிர்நோக்குமாறும் தொழிலாளர் ஆணையரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தை மீண்டும் 30–3–1993 அன்று தொழிலாளர் ஆணையர் முன்பு நடைபெறவுள்ளது. இவ்வாறு இப்பிரச்சினை குறித்து தொழிலாளர் துறையால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த புகளூர் சர்க்கரை ஆலை நிறுவனத்தை பாரி நிறுவனம் ஏற்றது. ஏற்கும்போது அதிலே 700 பேர் தொழிலாளர்களும் சிப்பந்திகளும் பணியாற்றினார்கள். 13–11–1992 அன்று

காலை 10 மணியளவில் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அனைவரையும் அந்த நிறுவனம் திடீரென்று வெளியேற்றி விட்டது. அதுமட்டுமல்லாமல் அவர்கள் குடியிருந்த வீடுகளையெல்லாம் அதிரடி நடவடிக்கை எடுத்து அவர்களை வெளியேற்றி விட்டார்கள். இது முற்றிலும் மனிதாபிமானத்திற்கு முரண்பட்ட செயலாக இருக்கிறது. ஆகவே, ஆலையினுடைய உரிமையாளர்கள் மாறினாலும், நடைமுறையிலுள்ள ஒப்பந்தங்கள் தொடர்ச்சியாக வரக்கூடிய உரிமையைக் கட்டுப்படுத்தும் என்று தொழில் தகராறு சட்டம் 18-வது பகுதியில் (சி) பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவினுடைய அனுகூலத்தைப் பயன்படுத்தி மீண்டும் எல்லா தொழிலாளர்களையும் வேலைக்கு நிறுவனம் எடுத்துக்கொள்வதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம் காக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, தொழிற் சங்கத் தலைவர்களோடும், தொழிலாளர் நலப் பிரதிநிதிகளோடும் மற்றும் நிறுவனத்தினரோடும் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. தொழில் தகராறு சட்டம் 25 (எப்)(எப்) என்கிற பிரிவின்படி இன்றைக்கு நவபாரத் நிறுவனத்திடமிருந்து, ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் அந்தப் புகளூர் சர்க்கரை ஆலையை ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆலையை மட்டும் ஒப்புக்கொண்டு அதிலே இருக்கிற தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய முழுத் தொகையையும் அவர்களுக்கு கொடுத்து, ஆலையை மட்டுமே புதிய நிர்வாகத்திடம் அந்தச் சட்டப்படி கொடுத்திருக்கிறது. இன்றைக்கு அதிலே 192 பழைய தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த ஆலை முழுத் திறனோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. 2500 டன் அரைவைத்திறன். இருந்தாலும் இன்றைக்கு அவர்களைக் கேட்டால் நாங்கள் மாடர்னைசேஷன் செய்திருக்கிறோம், ஆட்டோமேட்டிக் மெஷின் வைத்திருக்கிறோம், எனவே இன்றைக்கு பழைய அளவிற்குத் தொழிலாளர்கள் தேவையில்லையென்று தகவலைத் தருகிறார்கள். இருந்தாலும் இன்றைக்கு நம்முடைய தொழிலாளர் நலத்துறை அந்த நிறுவனத்தோடு பேசி மீண்டும் பழைய தொழிலாளர்களை எத்தனைப் பேரை வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியுமோ, அத்தனைப் பேரை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இன்றைக்கு கேட்டு வந்து கொண்டிருக்கிறோம். 30–3–1993 அன்று இங்கே தொழிலாளர் நல ஆணையர் முன்னால் பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30–3–1993 அன்று தொழிலாளர் நல ஆணையர் முன்பு பேச்சுவார்த்தை நடக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள்

1993 மார்ச் 23] [திரு. ம. சின்னசாமி]

சொன்னார்கள். ஏற்கெனவே, 16-12-1992, 8-1-1993, 9-2-1993, 18-2-1993 ஆகிய தேதிகளில் தொழிலாளர் நல ஆணையர் முன்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தையில் நிர்வாகம் சரியாகக்கூட கலந்து கொள்ளாதது மட்டுமல்லாமல், ஒரே பிடிவாதமாக இருந்த காரணத்தாலே 700 பேர் வேலை செய்த இடத்தில் 200 பேர் களைத்தான் வேலைக்கு எடுத்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற எல்லா கட்சிகளையும் சேர்ந்த அந்தத் தொழிலாளர்கள் என்னை வந்து சந்தித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே சொல்லி எங் களுக்கு பரிகாரம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டார் கள். அதை நான் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச் சரிடத்திலும் சொல்லியிருக்கிறேன்.

முற்பகல் 11-55

எனவே நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் ஆணையாளர் முன்பு அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வந்து ஒரு தீர்வு எடுப்ப தற்கு ஒத்துக் கொள்வார்கள் என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடி யாகத் தலையிட்டு அதிலே ஒரு சமரசத் தீர்வு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன் றைக்கு இரண்டு தொழிலாளர்கள் அங்கே சாகும் வரை உண்ணா விரதம் இருக்கிறார்கள். அங்கே ஒரு பதட்டமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் அமைச்சர் அவர்கள் அதிலே உடனடி யாகத் தலையிட்டு தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்தி இந்த அர சுக்கும் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நல்ல பெயரைத் தொழிலாளர் மத்தியில் உருவாக்குவதற்குரிய ஒரு ஏற்பாடை செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-3-1993 அன்று கரூருக்குச் சென்றி ருந்தபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுட னும், அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களிடமும் அன் றையதினம் சந்தித்துப் பேசி இருக்கிறேன். எனவே இன்றைக்கு தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகுந்த அக்கறையோடு இன்றைக்குச் செயல்பட்டு வருவது அத்தனைபேரும் அறிந்ததே பல்வேறு மூடிக்கிடந்த தொழிற்சாலைகளை எல்லாம் இன்றைக்குத் திறந்திருக்கிறோம். எனவே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசில் நிச்சயமாக, வேலைவாய்ப்பு இழந்த அந்தத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைத் தீவிரமாகப் பரி சீலிக்கும் வகையில் பேச்சுவார்த்தைகளை நடத்துவோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.